**கவனிக்க.**-2020.10.16ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி VI இல் 2020 ஆம் ஆண்டுக்கான குருநாகல் மாவட்ட நீதாசன வலயங்களின் யூரிமார்களின் பெயர்ப்பட்டியல் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2198 - 2020 ඔක්තෝබර් මස 16 වැනි සිකුරාදා - 2020.10.16

2198 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1438 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1440 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1439 | ஏல விற்பனைகள் | 1445 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


1437 - B 82069 - 405 (2020/ 10)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

### பாவனைக்கு உதவாத பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல்

01. இலங்கை நிலஅளவைத் திணைக்களத்திற்குச் சொந்தமான பாவனைக்கு உதவாதவை என சிபாரிசு செய்யப்பட்டுள்ள பின்வரும் பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனு கோரப்படுகின்றது.

02. ஏல விற்பனைக்குரிய பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களைப் பரிசீலனை செய்தல் 2020, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வரை அலுவலக நேரத்தில் சிரேஷ்ட நில அளவை ஆணையாளர் திட்டமிடல் மற்றும் வழங்கல், சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம் ( வள முகாமைத்துவம்) அவர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ள முடியும்.

03. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக உரிய விலைமனுப்பத்திரம் கொழும்பு -05, பேர்னாட் சொயிசா வீதி, இலக்கம் 150 எனும் முகவரியில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அலுவலகத்தில் சிரேஷ்ட நில அளவை ஆணையாளர் ( திட்டமிடல் மற்றும் வழங்கல் ) அவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

04.ஒவ்வொரு பொருட்களுக்குமான ( மொத்தமாக- Lot) வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்ட விலைமனுப் பத்திரங்களை உறையினுள் இட்டு முத்திரையிட்டு இடது பக்க மேல் மூலையில் "பொருளின் இலக்கம்..........." மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்களுக்கான விலை மனு " எனக் குறிப்பிட்டு ஒவ்வொரு பொருட்களுக்கும் மீளச் செலுத்தப்படாத ரூபா ஆயிரம் (1,000.00) வைப்புப் பணத்தினை விலைமனு பிணைப்பணமாக 2020, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர்) இந்த அலுவலகத்தின் சிறாப் உத்தியோகத்திரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியினை இணைத்து பற்றுச் சீட்டு இலக்கத்தினை விலைமனுப் படிவத்தில் குறிப்பிட்டு , கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு பொறுப்பேற்கப்படும் நேரத்திற்கு முன்னர் கிடைக்குமாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது திட்டமிடல் மற்றும் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இட முடியும்.

05. பொருட்களை விற்பனை செய்யும் போது சமர்ப்பிக்கப்படும் விலைமனுவின் பெறுமதிக்கு மேலதிகமாக அன்றைய தினத்தில் காணப்படும் பெறுமதி சேர் வரி, பெறுநரால் செலுத்தப்பட வேண்டும்.

06.விலைமனு பொறுப்பேற்கப்படுதல் 2020, நவெம்பர் 04 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு நிறைவடைவதுடன் அன்றைய தினம் மு.ப.11.05 மணிக்கு விலைமனு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் மற்றும் /அல்லது அவரது பிரதிநிதி பங்குபற்ற முடியும்.

07. தாமதமாகக் கிடைக்கின்ற அல்லது பூரணமற்றதாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன், இந்த விற்பனை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்களினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களே இறுதித் தீர்மானமாக அமையும்.

**விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் வகைகள்**

01. மடிக்கணினிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம்.
02. கணினி காட்சித் திரைகள், தொலைநகல் இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் அச்சு இயந்திரங்கள்
03. கணினி உதிரிப்பாகங்கள்
04. மரத்தளபாடங்கள் மற்றும் மட்பாண்ட வீட்டு உபகரணங்கள்
05. அளவையிடல் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
06. கணினிக் கதிரைகள்
07. மின்சார உபகரணங்கள் மற்றும் வேறு குறைபாடுள்ள பொருட்கள்
08. செயலாக்க உபகரணங்கள்.

நில அளவையாளர் நாயகம்,
நில அளவையாளர் நாயகம் அலுவலகம்.

இல. 150, பெர்னாட் சொய்சா மாவத்தை,
கொழும்பு- 05.
தொலைபேசி இலக்கம்: 011-2368106, 011-2369034, 011-369011 ) Ext 248.
2020, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி.

10- 917

## இலங்கைப் புகையிரத சேவைகள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## இரத்மலானையிலுள்ள புகையிரத வேலைத்தளங்களிலிருந்து இயந்திராதிகளை அகற்றல். SRS/ F.7670

*01. கீழே குறிப்பிட்டவாறு இரத்மலானையிலுள்ள புகையிரத வேலைத்தளங்களிலிருந்து இயந்திராதிகளை அகற்றுவதற்காக கொழும்பு10, இலங்கைப், புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுத் ( கீழ் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.*

Description of Machines

| | |
|---|---|
| Drilling Machine | Pipe rivert Machine |
| Shaping Machine | Lathe Machine |
| Case hardening furnace Machine | Drill Machine |
| Cylinder head Valve grinding Machine | Drill Machine |
| Shear Machine | Washer Machine |
| Pipe hammer Machine | - |

*02. 2020.09.28 ஆந் திகதியிலிருந்து 2020.10.22 ஆந் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.*

*03. விலைமனுக்கோரல்கள் 2020.10.23 ஆந் தியதியன்று பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.*

*04.விலைமனுவுடன் 50,000.00 ரூபா (ஐம்பதினாயிரம் ரூபா) தொகைக்கான விலைமனுப்பிணையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*தலைவர்,*
*திணைக்களப் பெறுகைக் குழு, (கீழ் மட்டம்),*
*இலங்கைப் புகையிரத சேவைகள்.*

Our Ref;.- SRS/F. 7670

*10- 661*

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -மூதூர்

## மூதூர் மவாட்ட /நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட, உரிமைகோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை -2020

*01. மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்ட, உரிமைகோரப்படாத பொருட்களின் ஏல விற்பனை 2020.10.30 ஆந் திகதியன்று காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.*

*2. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.*

*3. பகிரங்க ஏலவிற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.*

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. பொருட்களை கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய ஆளடையாள அட்டை கொண்டுவர வேண்டும்.

எம். எஸ். எம். சம்சுதீன்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

**விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள்**

| விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் | அளவு |
|---|---|
| 1. மணல் | 150 கியூப்ஸ் |

10- 818

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது மக்களுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய 'பிரவுன்ஸ் ஹெல்த் கெயார் (பிரைவட்) லிமிட்டட்' எனும் நிறுவனம் 2020, மாச்சு மாதம் 03 அந் திகதி முதல் அமுலாகும் வகையில் 'மெல்ஸ்டா ஹொஸ்பிடல்ஸ் ராகம (பிரைவட்) லிமிட்டட்'' என தனது நிறுவன நாமம் மாற்றப்பட்டுள்ளதை இதனூடாக அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் முன்னைய பெயர்: பிரவுன்ஸ் ஹெல்த் கெயார் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர்: மெல்ஸ்டா ஹொஸ்பிடல்ஸ் ராகம (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இல.: பீ வீ 77421
கம்பனியின் பதிவு அலுவலக முகவரி: இல. 110, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு 10

சபையின் உத்தரவுக்கமைய,

நுவந்தி குணவர்தன,
கம்பனிச் செயலாளர்.

10- 517/1

## பொது மக்களுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய 'பிரவுன்ஸ் ஹொஸ்பிடல்ஸ் (பிரைவட்) லிமிட்டட்' எனும் நிறுவனம் 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் தனது நிறுவன முகவரியை இல. 110, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு 10 என மாற்றப்பட்டுள்ளதை இதனூடாக அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் முன்னைய முகவரி: இல.481, டி.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.

கம்பனியின் புதிய முகவரி: இல. 110, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு 10

கம்பனி இல.: பீ வீ 77421

இயக்குனர் சபையின் உத்தரவுக்கமைய,

நுவந்தி குணவர்தன,
கம்பனிச் செயலாளர்.

10- 517/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய 'பிரவுன்ஸ் ஹெல்த் கெயார் நோர்த் கழும்பு (பிரைவட்) லிமிட்டட்' எனும் நிறுவனம் 2020, செத்தெம்பர் மாதம் 11 அந் திகதி முதல் அமுலாகும் வகையில் 'மெல்ஸ்டா ஹொஸ்பிடல்ஸ் கழும்பு நோர்த் (பிரைவட்) லிமிட்டட்'' என தனது நிறுவன நாமம் மாற்றப்பட்டுள்ளதை இதனூடாக அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் முன்னைய பெயர்: பிரவுன்ஸ் ஹெல்த் கெயார் நோர்த் கழும்பு (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர்: மெல்ஸ்டா ஹொஸ்பிடல்ஸ் கழும்பு நோர்த் (பிரைவட்) லிமிட்டட்

கம்பனி இல.: PV 89856

கம்பனியின் பதிவு அலுவலக முகவரி: இல. 110, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு 10

இயக்குனர் சபையின் உத்தரவுக்கமைய,

நுவந்தி குணவர்தன,
கம்பனிச் செயலாளர்.

10- 518/1

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய 'பிரவுன்ஸ் ஹெல்த் கெயார் (பிரைவட்) லிமிட்டட்' எனும் நிறுவனம் 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் தனது நிறுவன முகவரியை இல. 110, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு 10 என மாற்றப்பட்டுள்ளதாக இதனூடாக அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் முன்னைய முகவரி: இல.481, டி.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

கம்பனியின் புதிய முகவரி: இல. 110, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு 10

கம்பனி இல.: PV 89856

இயக்குனர் சபையின் உத்தரவுக்கமைய,

நுவந்தி குணவர்தன,
கம்பனிச் செயலாளர்.

10- 518/2

---

### டிரைபர்க் ட்ரவல்ஸ் & டூர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
### கம்பெனி இல. பீவீ 1139
### இறுதிக்கூட்டம் பற்றிய அறிவித்தல்

### உறுப்பினர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல்

டிரைபர்க் ட்ரவல்ஸ் & டூர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் உறுப்பினர்களது இறுதிக்கூட்டமானது பின்வரும் நோக்கத் துக்காக இல. 141/3, வோக்ஸ்ஹால் வீதி, கொழும்பு 2 இல் 2020, நவெம்பர் 05 ஆந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறுமென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2)ஆம் பிரிவின் கீழ், இத்தால்அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.-

* ஒழித்துக் கட்டுதல் எவ்வாறு நடத்தப்பட்டதென்பது பற்றி கணக்கொன்றை கூட்டத்தின் முன்னர் இடுதலும் அது பற்றிய ஏதேனும் விளக்கத்தை கொடுத்தலும்.

* கம்பனிகளின் புத்தகங்களும் பதிவேடுகளும் எவ்வாறு கைளுயுதிர்க்கப்பட வேண்டுமென முடிவு செய்தல்.

ஒழித்துக் கட்டுநர்,
திரு. சுமித் ரண்வத்த.

இல. 141/3, வோக்ஸ்ஹால் வீதி,
கொழும்பு 2.

10-557

---

### குணரத்ன ஒல்டிங்ஸ் அன் இன்வெஸ்மென்ட் (பிறைவட்) லிமிடெட்
### கம்பனி பதிவிலக்கம் PV 1142
### இறுதிக்கூட்டம் பற்றிய அறிவித்தல்
### உறுப்பினர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல்

குணரத்ன ஒல்டிங்ஸ் அன் இன்வெஸ்மென்ட் (பிறைவட்) லிமிடெட்டின் உறுப்பினர்களது பின்வரும் நோக்கத்துக்காக கொழும்பு 2, வொக்ஸ்வோல் வீதி, 143/ 2 ஆம் இலக்கத்தில் 2020, நவெம்பர் 05 ஆந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறுமென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவின் கீழ், இத்தால் அறியத்தருகின்றது.-

* ஒழித்துக்கட்டுதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பது பற்றிய கணக்கொன்றை கூட்டத்தின் முன்னர் இடுதலும் அது பற்றிய ஏதேனும் விளக்கத்தை கொடுத்தலும்.

* கம்பனிப் புத்தகங்களும் பதிவேடுகளும் எவ்வாறு கைளுயுதிர்க்கப்பட வேண்டுமென முடிவு செய்தல்.

ஒழித்துக் கட்டுநர்,
திரு. சுமித் ரண்வத்த.

இல. 143/2, வோகஷ்வோல் வீதி,
கொழும்பு 2.

10-558

---

### செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் பதிவிலக்கம் (PV 108669)
### பகிரங்க அறிவித்தல்

2020, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்ட பின் அதே தலைப்பின் கீழ் முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்பதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளதை தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக மேற்கொள்ள முடியவில்லை. அதன்படி 2020, ஒற்றோபர் 02ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு இரத்துச் செய்யப்படுகின்றது. இது தொடர்பாக பின்வரும் புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242(3) b ஆம் பிரிவின் நியதிகளின் படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115 ) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் ( பதிவிலக்கம் - PV 108669) என்பவற்றுடனான உத்தேசிக்கப்பட்ட ஒன்று சேர்க்கை பற்றிச் சட்டத்தின் 242ஆம் பிரிவின் (1) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படியான பகிரங்க அறிவித்தல்

2020, ஒற்றோபர் 15 ஆந் திகதியன்று செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் முதன்மைக் கம்பனியாக நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற் (பதிவிலக்கம் PV 00215115) அமைகின்றது. நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட் ) லிமிற்றெற்

பணிப்பாளர் சபையுடன், செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் பணிப்பாளர் சபையும் ஒன்றிணைக்க தீர்மானிக்கப்பட்டது. நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (PV 00215115 ) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் சட்டத்தின் 242(1)ஆம் பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115 ) ஒன்று சேர்ப்பதற்கு தீர்மானித்தது. இதன் மூலம் நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் தொடர்ந்திருக்கும் என்பதுடன், செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் இல்லாதொழியும்.

இவ்வறிவித்தலிலிருந்து 20 நாட்களுக்குக் குறையாததாக வுள்ள ஒரு நாளன்று கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115), செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் (PV 108669) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தைப் பதிவு செய்வதற்காகக் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுவதனைப் பின்பற்றிக் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்று சேர்க்கைச் சான்றிதழை வழங்குவதன்மேல் ஒன்று சேர்க்கை பயனுறும்.

*சட்டத்தின் 242(4)ஆம்பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றை ( PV 00215115) செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் (PV108669) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதனை அங்கீகரிக்கின்ற சபைகளினாலான தீர்மானங்களாக அமைகின்றனவாகக் கருதப்பட வேண்டிய ஒன்று சேர்க்கை உத்தேசத்தின் பிரதிகள், வழமையான வேலை நேரங்களின்போது கொழும்பு2, வொக்ஸ்வோல் வீதி, 141/ 3ஆம் இலக்கத்திலுள்ள கம்பனிச் செயலாளரான சார்ட் பிஸ்னஸ் சிஸ் டம் ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் அலுவலகத்தில், கம்பனி யின் எவரேனும் பங்கு தாரரின் அல்லது கடன் கொடுநரின் அல்லது எந்த ஆளுக்கு கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆளின் பரிசோதனைக்காகக் கிடைக்கக் கூடியதாகவுள்ளன.

கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் ஒருவர் அல்லது எந்த ஆளுக்குக் கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் கம்பனிக்குச் செய்யப்படும் கோரிக் கையின்மேல், ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தின் பிரதியொன்று கட்டணமின்றி அவருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் பணிப்பாளர் சபையினது கட்டளைப்படி,

சார்ட் பிஸ்னஸ் சிஸ்டம்ஸ்
(பிறைவேட்) லிமிற்றெற்,
செயலாளர்.

2020, ஒற்றோபர் 15.

10- 657

## நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115) பகிரங்க அறிவித்தல்

2020, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்ட பின் அதே தலைப்பின் கீழ் முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்பை தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக மேற்கொள்ள முடியவில்லை. அதன்படி 2020, ஒற்றோபர் 02ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு இரத்துச் செய்யப்படுகின்றது. இது தொடர்பாக பின்வரும் புதிய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242(3) b ஆம் பிரிவின் நியதிகளின் படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115 ) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் ( பதிவிலக்கம் - PV 108669) என்பவற்றுடனான உத்தேசிக்கப்பட்ட ஒன்று சேர்க்கை பற்றிச் சட்டத்தின் 242ஆம் பிரிவின் (1) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படியான பகிரங்க அறிவித்தல்

2020, ஒற்றோபர் 15 ஆந் திகதியன்று செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றினால் முழுமையாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட துணைநிலைக் கம்பனியா கவுள்ள நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115 ) மற்றும் நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றேற் (PV 00215115) என்பவற்றின் பணிப்பாளர் சபையும், ஒன்றிணைக்க தீர்மானிக்கப்பட்ட நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (PV 00215115) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115 ) ஒன்று சேர்ப்பதற்கு தீர்மானித்தன. இதன் மூலம் (நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் தொடர்ந்திருக்கும் என்பதுடன், செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் இல்லாதொழியும்.

இவ்வறிவித்தலிலிருந்து 20 நாட்களுக்குக் குறையாததாக வுள்ள ஒரு நாளன்று கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115 ) செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ்(பிறைவேட்)லிமிற்றெற்(PV 108669)என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தைப் பதிவு செய்வதற்காகக் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுவதனைப் பின்பற்றிக் கம்பனிகள் பதிவாளர் தலைமையதிபதி சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்று சேர்க்கைச் சான்றிதழை வழங்குவதன்மேல் ஒன்று சேர்க்கை பயனுறும்.

* சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றை ( PV 00215115) சென்டிப் பூட் ப்ரொடக்ஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் ( PV 108669 ) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதனை அங்கீகரிக்கின்ற சபைகளினாலான தீர்மானங்களாக அமைகின்றனவாகக் கருதப்பட வேண்டிய ஒன்று சேர்க்கை உத்தேசத்தின் பிரதிகள், வழமையான வேலை நேரங்களின்போது கொழும்பு2,

வொக்ஸ்வோல் வீதி, 141/3 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனிச் செயலாளரான க்ரூப் மெனேச்மென்ட் அன் செக்ரடரியல் சேவிசஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் அலுவலகத்தில், கம்பனியின் எவரேனும் பங்குதாரரின் அல்லது கடன் கொடுநரின் அல்லது எந்த ஆளுக்கு கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆளின் பரிசோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் ஒருவர் அல்லது எந்த ஆளுக்குக் கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் கம்பனிக்குச் செய்யப்படும் கோரிக்கையின்மேல், ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தின் பிரதியொன்று கட்டணமின்றி அவருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றின் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

க்ரூப் மெனேஜ்மென்ட் அன்
செக்ரடரியல் சேவிசஸ்
(பிறைவேட்) லிமிற்றெற் ,
செயலாளர்.

2020, ஒற்றோபர் 15.

10- 658

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1)ஆம் பிரிவின் படியான கூட்டிணைப்பு

எல் ஓ எல் சி ஹோல்டிங்ஸ் பீஎல்சி - பீகிவ் 70 (LOLC) மற்றும் ஐ பே ( பிறைவேட்) லிமிடெட் - பீபி 3850 பீவி ( ipay) ஆகிய கம்பனிகளின் பணிப்பாளர்கள் சபையினால் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவிற்கமைவாக ipay கம்பனியினை LOLC கம்பனியின் முழுமையான துணை நிறுவனமாக கூட்டிணைப்பதற்கான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது. இக் கூட்டிணைப்பின் விளைவாக அனைத்து i pay இனது பங்குகளும் எவ்விதமான கொடுப்பனவோ அல்லது வேறு ஏதேனும் பெறுமதி வழங்கலோ இன்றி இரத்துச் செய்யப்படுவதுடன், LOLC ஆனது ipay இனது அனைத்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சுவீகரிக்கும். தொடர்ந்தியங்கும் கம்பனி LOLC ஆகும். LOLC இனது தற்போதைய பணிப்பாளர்களே கூட்டிணைப்பின் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பணிப்பாளர்களாகத் தொடர்ந்தியங்குவர்.

கம்பனியின் பணிப்பாளர் சபையின் அபிப்பிராயப்படி, பரிந்துரைக்கப்பட்ட கூட்டிணைப்பானது இரு கம்பனிகளினதும் சிறந்த ஏற்புடையது என்பதுடன், கூட்டிணைக்கப்பட்ட கம்பனியான (LOLC) கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் உடனடியாக கூட்டிணைப்பானது வலுவுக்கு வரும் என்பதுடன், தீர்வுத்திறன் பரிசோதனையினையும் திருப்திப்படுத்தும் எனக் கருதுகின்றனர்.

இக் கூட்டிணைப்பானது 2020, ஒற்றோபர் 29 ஆந் திகதியன்று அல்லது கம்பனிகளின் பொதுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் நாள் தொடக்கம் வலுவிற்கு வரும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
எல் ஓஎல்சி கோப்பரேட்
சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
எல் ஓ எல் சி ஹோல்டிங்ஸ் பீஎல்சி மற்றும் ஐ பே
(பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் செயலாளர்கள்.

2020, ஒற்றோபர் 01.

10-624

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஹெல்த் என்ட் குளோவ் பார்மசி ( பீவீடி) எல்டீடி
பதிவு இலக்கம்: பீவீ 129110
பதிவு செய்யப்பட்ட முகவரி: இல. 223, நீர்கொழும்பு வீதி, வத்தளை
கூட்டிணைப்புத் திகதி: 2018.01.22

நாகொட விதானகே பிரபாத்
ஹேமந்த,
கம்பனிச் செயலாளர்.

10-776

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, ஹக்மன வீதி, இலக்கம் 33 என்ற இடத்தில் பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்லும் மார/ஸமு 1074 கீழாக பதிவு செய்யப்பட்டுள்ள வ/ப மாத்தறை மாவட்ட மூலதன கூட்டுறவுச் சங்கமாகிய எமது சங்கம் மூலம் மாத்தறை பிரசித்த நொத்தாரிசு திருமதி தனங்ஜனி நாமலி கத்ரியாரச்சி மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 166 மற்றும் 2018.11.15 ஆந் தினத்தையுடைய விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் மிரிஸ்ஸ , களுஒபிஸர கொரட்டுவவில் வதியும் குனி ஹென்னதிகே பிரேமலால் ( தே.அ.அ.இல. 196403604190 ) என்பவருக்கு காலி பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அத்தியாய இருமடித்தாள் 97/36 மற்றும் 3411 ஐ உடைய நாட் புத்தகத்தின் கீழாக பதிவு வழங்கப்பட்டுள்ள அற்றோணி அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக அனைவருக்கும் அறிவித்துக் கொள்கின்றோம்.

10- 508

---

## வழக்கறிஞரினால் அங்கீகாரம் பெற்ற நபருக்கான உரித்தாவனம் மீளப்பெறுதல்

6 ஆவது மாடி, அலெக்ஸாண்டரா ஹவுஸ், 18 சார்ட்டர் வீதி, மத்திய ஹாங் கொங்கை பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரியாகக் கொண்ட MGF சோர்சிங் பார் ஈஸ்ட்

லிமிடெட்டின் இயக்குநரான மைக்கேல் அண்டோனி யீ ஆகிய நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது இல. 41, சுற்றுவட்ட வீதி, பங்களாவத்த , மாபோல, வத்தளை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் வசிக்கும் திரு.ஷெஹான் இந்திரஜித் வித்தாரனவுக்கு , ஹாங் கொங் கீழுள்ள சீன மக்கள் குடியரசின் சிறப்பு நிர்வாக பகுதியில் அனுமதிபெற்ற பிரசித்த நொத்தாரிசு டேவிட் ஜோன் லொரென்ஸினால் சான்றளிக்கப்பட்டு 2019, சித்திரை 23 ஆந் திகதியிடப்பட்ட வழக்கறிஞரால் அங்கீகாரம் பெற்ற நபருக்காக உரித்தாவனம் அவரின் இராஜினாமாவை கருத்தில் கொண்டு இதன் மூலம் 2020, ஐப்பசி 01 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு மீளப்பெறப்படுகின்றது. அத்துடன் அவரினால் மேற் குறிப்பிடப்பட்ட ஆவணத்தினால் நடாத்தப்பெற்ற ஏதேனும் பரிவர்த்தனைகளுக்கு நாம் குறிப்பிட்ட திகதியிலிருந்து எந்த விதமான பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

மைக்கேல் அண்டோனி யீ ,
இயக்குநர்,
MGF சோர்சிங் பார் ஈஸ்ட்
லிமிடெட்.

10- 548

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வென்னப்புவை, உல்ஹிட்டியாவ, குறுக்கு வீதி ஹெலன் மாவத்தை, இல. 239/ D (தற்போது via Matteo Civitali, 41, 20148, Milano MI, Italy) எனும் முகவரியில் வசிக்கும் களுத்தற கங்கானம்லாகே ஷர்மன் டேவிஸ்டன் பிரனாந்து மற்றும் வர்ணகுலசூரிய ஷிவந்தி டிலெக்டா பிரனாந்து ஆகிய நாங்கள், தொடுவாவ, தொடுவாவ தெற்கு எனும் முகவரியில் வசிக்கும் வர்ணகுலசூரிய சுநெத் பிரியந்த வாஸ் மற்றும் மாரவில, ஹால்பன்வில, ஹொரகெலே, கொவிபொல வீதி எனும் முகவரியில் வசிக்கும் குருவலான ஆரச்சிகே அயேந்திர நிலங்க பிரபாத் என்பவருக்கு , மாரவில பிரசித்த நொத்தாரிசு இந்திரசிறி சேனாரத்ன என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 922 ஆம் இலக்கமுடைய 2013.08.01 ஆந் திகதிய மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணி உத்தரவுப்பத்திரப் புத்தகத்தில் 104 ஆம் பிரிவு 56 ஆவது பத்திரத்தில் இலக்கம், நாளேட்டு இலக்கம் 9001 இன் கீழ் 2013.09.30 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணி தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நாம் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவிக்கின்றோம்.

களுத்தற கங்கானம்லாகே ஷர்மன்
டேவிஸ்டன் பிரனாந்து மற்றும்
வர்ணகுலசூரிய ஷிவந்தி டிலெக்டா பிரனாந்து .

10- 561

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வென்னப்புவ, நைனமடம, நைனமடம மேற்கு, இல. 107/E என்ற இடத்தில் குடியிருக்கும் இச்சம்புல்லி ஆராச்சிகே மேரி ஜசிந்தா பர்னாந்து ( தே.அ.அ.இல. 557643249V) ஆகிய நான், 2004.12.08 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு டபி. ஏ.ரீ. கங்கா லிவேரா மூலம் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திர இல. 50 என்ற அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் 1902 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரம் கட்டளைச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை இரத்துச் செய்கின்றேன்.

ஐ. ஏ.எம்.ஜே.பர்னந்து.

வென்னப்புவ,
2020, ஒற்றோபர் 02.

10- 714

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மஹவெவ, இஹல மஹவெவ, இல.336, ''தெலிசிங்க நிவச'' எனும் முகவரியைச் சேர்ந்த தெலிசிங்க முதியன்சேலாகே வசித ராஜா தெலிசிங்க ஆகிய நான், சிலாபம் பிரசித்த நொத்தாரிசு மனோஹர் உக்கத ராஜபக்ஷ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 7353 மற்றும் 2000.01.11 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தின் மூலம், மஹவெவ, இஹல மஹவெவ, இல.336, ''தெலிசிங்க நிவச'' எனும் முகவரியைச் சேர்ந்த தெலிசிங்க முதியன்சேலாகே துசித ராஜா தெலிசிங்க என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இது முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன். இதன் பின்னர் எனது சார்பாக குறித்த அற்றோணி தத்துவகாரரால் நிகழ்த்தப்பட்ட எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

தெலிசிங்க முதியன்சேலாகே வசித ராஜா தெலிசிங்க .

10- 725

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அமெரிக்காவில் (No. 8, High Wood Place, Alpine, New Jersey 07620, United States of America என்ற முகவரியில்) வசிக்கும் சந்திரா யோகனாதன் - திருமணத்திற்கு முன்னர் ஆறுமுகம் (அமெரிக்கா கடவுச்சீட்டு இல. 554488616 மற்றும் பழைய அமெரிக்கா கடவுச்சீட்டு இல. 221116729) ஆகிய என்னால் கொழும்பு 05, கிருல வீதி, இல. 105 என்ற முகவரியில் வசிக்கும் மதுரப்பெருமகே சந்திரசிறி ஜயரத்ன ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 560271581V) என்பவருக்கு கொழும்பு

பிரசித்த நொத்தாரிசினால் 105 என்ற இலக்கமுடைய 2016.09.03ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். மேலும் இந்த விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் இதற்குப் பின் அவருக்கு எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் செய்ய முடியாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

சந்திரா யோகனாதன்.

10- 885

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடக்கு களுத்துறை, தெதியவல, கந்தெகுருந்துவத்த, இல. 234 இல் வசிக்கும் தோன அயோனா ஈவன்ஸ் கொடமுனே ஆகிய என்னால் லெஸ்குருகே வொல்வின் கருணாசேன (தே.அ.அ.இல. 503032147 V) என்பவரை எனது பெயரில் மற்றும் என் சார்பாக செயலாற்றுவதற்காக எனது அற்றோணி தத்துவகாரராக நியமித்து, சட்டத்தரணி மற்றும் குடா வஸ்கடுவவின் பகிரங்க நொத்தாரிசு திரு. எதிரிமுனி ஸ்வாரிஸ் சொய்சா என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 3930 மற்றும் 2011.06.03 ஆந் திகதிய அற்றோணித் தத்துவத்தை இனிமேல் என் சார்பாக செயற்படுவதற்கு அற்றோணி தத்துவகாரர் தேவையில்லை என்பதால் அதனை இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகின்றது. இதன் பிறகு மேற்படி தத்துவத்தின் பிரகாரம் எனது பெயரில் தோன்றி லெஸ்டுருகே வொல்வின் கருணாசேன என்பவரால் மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளும் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

டி.ஏ.ஈ.கொடமுனே .

10- 715

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

ஏ. என் .எம் .பிரியங்க மற்றும் ஏ. எம். ஜீ .அசோக்கா.
கணக்கு இல. :1108 5703 4201

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.13 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.12.02ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்தொரு இலட்சத்து நாற்பத்தி மூவாயிரத்து நூற்று இரண்டு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூபா 81,43,102.78) 2019, செத்தெம்பர் 16 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்தாறு ரூபா பதினேழு சதம் (ரூபா 74,32,536.17) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதிநான்கு வீதம் (14%) மேலும் தொண்ணூற்றெட்டாயிரத்து இருநூற்று முப்பத்தாறு ரூபா தொண்ணூற்றேழு சதம் (ரூபா 98,236.97) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.12.04 ஆந் திகதி மு.ப.11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், வடக்கு பிட்டிகல் கோரளே முன்னேஸ்வரம் பத்துவின் சிலாபம் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மைக்குளம் கிராம அலுவலர் பிரிவின் மைக்குளம் கிராமத்தில் அமைந்த "வுட்லண்ட்ஸ் வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஸ்ரீதரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, செத்தெம்பர் 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 6770 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு; உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். எம். பீ. டீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, யூலை 15 ஆந் திகதியிடப்பட்ட இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 50; கிழக்கு: இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் $34^{2}$; தெற்கு : இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் $34^{5}$ (வீதி – பிரதேச சபை) மற்றும்; மேற்கு : இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் $R^{1}$ (வீதி – பிரதேச சபை) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு

அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6770 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 6770 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட கூறப்பட்ட லொட் 1 மிகத் திருத்தமாக கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற்கூறப்பட்ட மைக்குளம் கிராமத்தில் அமைந்த "வுட்லண்ட்ஸ் வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். எம். பி. டீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, யுலை 15 ஆந் திகதியிடப்பட்ட இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட $34^{1}$ இன் மீள் அளவீடாகும்) உத்தரவுபெற்ற நில அளவையளர் எஸ். ஸ்ரீதரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, யுன் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 2103 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 50; கிழக்கு: இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் $34^{2}$; தெற்கு: இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் $34^{5}$ (வீதி) மற்றும்; மேற்கு: இல. $1328^{P}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் $R^{1}$ (வீதி – பிரதேச சபை) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல.2103 எனும் வரைபடத்திற்கு அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட சிலாபம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 57/117 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 716

---

### பிரதேச அபிவிருத்தி வங்கி

### பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை

இல. 68/B மெதிரிகிரிய கிராம அலுவலர் பிரிவு 1, கௌதுலுவெவ முதலாம் படிமுறைக் கிராமம் என்ற முகவரியைக் கொண்ட 'கஹம்பிலியாவ' எனக் குறிப்பிடப்படும், அளவையியலாளர் நாயகம் அவர்களால் வரையப்பட்ட F.V.P. PO 107 துண்டு 274 என அழைக்கப்படும், வடக்கே துண்டு இல. 286, தெற்கே துண்டு இல. 285, மேற்கே துண்டு இல. 275 ஆகிய 02 ஏக்கர், 02றூட், 03 பேர்ச் கொண்ட,மெதிரிகிரிய பிரதேச செயலாளரின் 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட NCP/ MG/ L/1 ஆம் இலக்க அனுமதிக் கடிதத்தின் மூலம் உத்தரவு பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எச். எம். ஆர். ரீ. கே. ஹேரத் அவர்களால் வரையப்பட்ட 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 4721 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 றப்புக்கன எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் :1ஏ.0றூ.25.19பே.
அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2020ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் கல்அமுனு கிளை வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவு செய்து 2018.03.02ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018.05.03 ஆந் திகதிய தினமின, டெயிலி நியுஸ் மற்றும் தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்திற்குச் சென்றடைதல்.**- மெதிரிகிரிய நகரில் இருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை சென்று, அங்கிருந்து வலது பக்கமாக உள்ள நாற் சந்தியில் தியசென்புர வீதிக்குத் திரும்பவும். இந்த வீதி ஊடாக தியசென்புர நகருக்குச் சென்று, அங்குள்ள நாற் சந்தியில் வலது பக்கமாக உள்ள பொலன்னறுவ-கிரிமெட்டியான பாதைக்குத் திரும்பவும். அப்பாதையில் சுமார் 03 கிலோ மீற்றர் தூரம் வரை பயணம் செய்து, கஹம்பிலியாவ சந்தியை சென்றடையவும். குறித்த சொத்து உங்களது பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25 % (இருபத்தைந்து சதவீதம்);
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1 % விற்பனை வரி (ஒரு சதவீதம்);
(3) ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;
(4) எழுது வினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500;
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி .

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய பொது முகாமையாளர், பிரதேச

அபிவிருத்தி வங்கி, வடமத்திய மாகாண அலுவலகம், இல.65/D, 4 ஆவது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம் என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம்: 025-222 3080, 025- 222 5214.
மேலே கூறப்பட்டவாறு கொள்முதல் விலையில் மிகுதி 30 நாட்களுக்குள் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.
உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே தேசம், ஒரே ஏல
விற்பனையாளர்,
128 வருட கால மகோன்னத
சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகமும் காட்சியறையும்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலை/பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு -8
தொலைபேசி: 011-2671465, 011-2671468
தொலைபேசி/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையத் தளம்: www.sandslanka.com

10- 651

---

## பிரதேச அபிவிருத்தி வங்கி

## பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை*

வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டம், நாச்சதூவ பிரதேச செயலகப் பிரிவு, நுவரகம் கோரளே, 265 குடா நெலுபெவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டதும், உரிமம் கொள்ளப்பட்டதுமான கள பத்திர இல. 15, I.S.P.P. 03 இல் துண்டு 91 எனக் குறிப்பிடப்பட்டுள்ள ( 0ஏ.1றூ. 39பே.) விஸ்தீரணமான அரச காணி.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மீள் அளவைக்கு அமைய குறித்த காணி பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.

வட மத்திய மகாணம், அநுராதபுர மாவட்டம், நாச்சதூவ பிரதேச செயலகப் பிரிவு, நுவரகம் கோரளே, குடா நெலுபெவ கிராமத்தில் அமைந்துள்ள 1997 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட Anu/ NnP/ P/ 2749 ஆம் இலக்க வழங்கல் இலக்கம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட குடா நெலுவெவ கலே என அழைக்கப்படும், 2006 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் கே. கே. சின்னையா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 59 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் :0ஏ.1றூ. 39பே.
அதிலுள்ள மரங்கள், பழங்கள்,கட்டடங்கள் மற்றும்
அனைத்தும் அடங்கலாக

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2020ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05ஆந் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு எம்மால் பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலாவ கிளை வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவு செய்து 2019, ஓகத்து 16 ஆந் திகதியஅரசாங்க வர்த்தமானியையும், 2019, செத்தெம்பர் 17 ஆந் திகதிய "தினமின" , "டெயிலிநியுஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்தை சென்றடைதல்.**- தலாவ நகரிலிருந்து அநுராதபுரம் வீதி ஊடாக ரத்மலே சந்தி வரை செல்லவும். அங்கிருந்து வைத்தியசாலை வீதி ஊடாக சுமார் 100 மீற்றர் வரை செல்கையில் குறித்த காணி பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளதைக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25 % (இருபத்தைந்து சதவீதம்);
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1 % விற்பனை வரி (ஒரு சதவீதம்);
(3) ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் கொள்விலைக்குப் பொருத்தமான வரிகளுடன்;
(4) எழுது வினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500.00;
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி .

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமத்திய மாகாண அலுவலகம், இல. 65/D, 4 ஆவது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம் என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம்: 025-222 3080, 025-2225214.

மேலே கூறப்பட்டவாறு கொள்முதல் விலையில் மிகுதி 30 நாட்களுக்குள் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏல விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே தேசம், ஒரே ஏல
விற்பனையாளர்.
128வருட கால மகோன்னத
சேவை.'

தலைமை அலுவலகமும் காட்சியறையும்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
தொலை/பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
தொலை/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணைய தளம்: www.sandslanka.com

10- 652

---

**மக்கள் வங்கி - கொடக்கவெல கிளை**

## பெறுமதிமிக்க சொத்து
## பகிரங்க ஏல விற்பனை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழான விற்பனை*

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், அட்டகலன் கோரளே, மெத பற்றுவில் கொடக்கவெல பிரதேச செயலகம் பிரிவுக்கு உட்பட்ட, கொடக்கவெல கிராம அலுவலர் பிரிவில், கொடக்கவெல பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட, கொடக்கவெல கிராமத்தில் அமைந்துள்ள அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எம். எம். டீ. எஸ். ஷாந்த அவர்களால் வரையப்பட்ட 2016, செத்தெம்பர் 01 ஆந் திகதியிடப்பட்ட 6754 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள 'வெவேஹேனவத்த அல்லது வெவே-வத்த' என அழைக்கப்படும் காணித்துண்டும் அதிலுள்ள கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக வடக்கே பாதையையும், கிழக்கே எஸ்.பி. ஏக்கநாயக்கவுக்குச் சொந்தமான காணித்துண்டையும் , தெற்கு மற்றும் மேற்கே அரச காணிகளான வரைபட இல. 1817 இல் துண்டு 01 (பாதை) மற்றும் 04 என்பனவற்றினால் சூழப்பட்ட காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் :0ஏ.1றூ. 20பே.
அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2020ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் மக்கள் வங்கி கொடக்கவெல கிளை வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏல விற்பனை நடைபெறும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- தயவு செய்து 2019.02.01ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், "டெயிலி நியுஸ்", "தினமின" மற்றும் "தினக்குரல்" ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**காணிக்குச் சென்றடைகின்ற வழி**.- கொடக்கவெல நகர மத்தியிலிருந்து (கடைத்தொகுதிப் பிரதேசம்) பள்ளேகம வீதி வழியாக (பலாங்கொடை வீதி) சுமார் 450 மீற்றர் தூரம் வரை செல்கையில் குறித்த சொத்தை பாதையின் வலது பக்கத்தில் காணக் கூடியதாக இருக்கும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையில் 10 % (பத்து சதவீதம்);
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1 % விற்பனை வரி (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/ 2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக் கப்படும் சகல வரிகளும் ;
(4) எழுது வினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500.00;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) முத்திரைக் கட்டணம் மற்றும் விற்பனைச் சான்றி தழுக்கான நொத்தாரிக் கட்டணம் .

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி கொடக்கவெல கிளை என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.
தொலைபேசி இலக்கம்: 045- 2240570/045- 2240170.

மேலே கூறப்பட்டவாறு கொள்முதல் விலையில் மிகுதி 30 நாட்களுக்குள் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (10%) பத்து சதவீதத்தை பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்தியத் தலைமை அலுவலகம், இரத்தினபுரி.
தொலைபேசிஇல.: 045- 2223084, 045- 2232108.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே தேசம், ஒரே ஏல
விற்பனையாளர்,
128வருட கால மகோன்னத
சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகமும் காட்சியறையும்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467, 011-2671468
பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணைய தளம்: www.sandslanka.com

10- 653

---

**பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ. இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் மற்றும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கோரளைகள், ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவு, ஹபராதுவ பிரதே சபை எல்லைக்குட்பட்ட, 160A தம்மன்னேகொட கிராம அலுவலர் பிரிவு, ஹத்துவாபியதிகம எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய தொடர்ச்சியான ஒன்றிணைக்கப்பட்ட திய எலவத்தையில் காணித்துண்டு C மற்றும் காணித்துண்டு B யில் காணித்துண்டு B1 என்று அழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.R. வீரசூரிய அவர்களினால் தயாரிக்கப்பட்ட 18/ 07/ 2017 ஆந் திகதிய வரைபட இல. 3793 இல் விபரிக்கப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட X என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதுமாகும். மேலும் காலி காணிப் பதிவகத்தில் D 757/ 121 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

( காணியின் விஸ்தீரணம்: 00ஏ.00றூ.32.55பே.)

2020, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு

"கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான" தந்திரி முதலிகே ரொஸ் கிறிஸ்டோபர் டில்ஷான் தந்திரிமுதலிகே என்பவர் பதிவு இல. பீகியூ 48 ஐக்கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ. இன் சார்பில் காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு K.H.M.M. காரியவசம் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2018, சனவரி 12 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டு முறி இல. 191 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2020.09.25ஆந் திகதிய "திவயின" "ஜலண்ட்", மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- அஹங்கம நகரத்திலிருந்து இமதுவ பாதையில் புகையிரத பாதை வரை சுமார் 100 அடி தூரம் வரை சென்று, முனிதாச மாவத்தைக்கு வலது பக்கம் திரும்பவும். பின்னர் தார் பாதையில் சிறிதிலக்க மாவத்தைக்கு சுமார் 300 மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கம் மேல் உள்ள கொங்கிறீட் பாதைக்கு திரும்பவும். பின்னர் அப்பாதையில் சுமார் 200 மீற்றர் வரை தொடர்ந்து பயணிக்கும் போது சொல்லப்பட்ட ஆதனத்தை அடையலாம். சொல்லப்பட்ட ஆதனமானது வலது பக்கத்தில் அமைந்துள்ளதுடன் சிறிதிலக்க மாவத்தை எல்லைக்குட்பட்டது.

**கொடுப்பனவு முறை**.-கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

1. கொள்முதல் விலையின் 10% ;
2. உள்நாட்டு இறை வரி மற்றும் வெட் வரி 1% ;
3. ஏல விற்பனையாளர் கட்டணம் கொள்முதல் விலையின் 2.5 % ( இரண்டரை வீதம்);
4. விற்பனை உள்ளடங்கியதாக சகல பகிரங்கப்படுத்தல் செலவுகள்;
5. விற்பனை நிபந்தனை தொடர்பாக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூபா 3000.00;

6. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 1,500.00 மற்றும் விற்பனைக்கன வேறு கட்டணங்கள்.

ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்முதலில் மிகுதி 90% பணத்தொகையை வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். மேற்கூறிய பணத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்க வேண்டி ஏற்படுவதுடன், அவ்வாதனத்தை மீள் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.- முகாமையாளர்- கடன் அறவிடுதல் , பேன் ஏஷியா வங்கி கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ., தலைமை அலுவலகம், இல. 450, காலி வீதி, கொழும்பு -03. தொலைபேசி இல. 011- 4667227, 0114667130.

பீ. கே.ஈ. சேனாபத்தி,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர் .

இல. 134, பெத்தேகன பாதை,
கோட்டை.
தொலைபேசி இல.: 011- 2873656, 077-7672082.
தொலைநகல் இல.: 011-2871184.

10- 662